# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## DEPOSITION OF WITNESS
## SC.NO. 159/2021

**Deposition of Witness for P.W.2**

| | |
|---|---|
| NAME | - வெங்கடேசன் |
| FATHER'S NAME | - காளியப்பன் |
| VILLAGE | - |
| TALUK | - |
| CASTE | - |
| OCCUPATION | - |
| RELIGION | - |
| AGE | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **20.11.2023**.

A1 A2, A5 Present A6 Produced.A3, A4, A7 ABSENT. PETITION U/S.317 CRPC FILED AND ALLOWED.

நான் வேப்பங்குப்பம் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு பற்றி போலீசார் என்னிடம் எந்த விசாரணையும் செய்யவில்லை.

**சாட்சி பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையின் போது 03.01.2015 ஆம் தேதி பகல் சுமார் 11.30 மணிக்கு நான் ஒடுகத்துார் கோவிந்தசாமி மகன் வேணுகோபால் கவுண்டர் விவசாய பம்பு செட் பயன்படாத கிணற்றிடம் மீன் பிடிக்க சென்ற போது ஒரு ஆண் பிணம் கிணற்றில் மிதந்து கொண்டு இருந்தது என்றும் அதை பார்த்து நான்

பயந்து போய் அந்த நிலத்துக்காரர் வேணுகோபாலிடம் தகவல் சொன்னேன் என்றும் அருகில் எல்லோரும் பார்தனர் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு குறித்து போலீசார் என்னிடம் எந்த விசாரணையும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த தகவலையும் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். வேணுகோபால் வீட்டிற்கு பின்புறம் ஆற்றுஓரம் அந்த கிணறு உள்ளது என்றால் சரிதான். வேணுகோபால் வீட்டிற்கு காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். அந்த காம்பவுண்டுகுள் ஒரு பேக்டரி உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் உள்ளவர்கள் அனுமதியில்லமல் உள்ளே யாரும் செல்லமுடியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் வேணுகோபால் நிலத்தில் உள்ள கிணற்றுக்கு என்னால் வீட்டில் உள்ளவர்கள் அனுமதியில்லாமல் செல்ல இயலாது என்றாலும் நான் அனுமதி பெற்று அந்த கிணற்றுக்கு செல்லவில்லை என்றாலும் சரிதான்.

P REVATHY Digitally signed by P REVATHY